உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

# வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபை,

கும்பகோணம்.

ப்ரசுரம் 38.

புதுக் கக்ஷிகள் அவசியமா?

## குணம் செழித்தால் குலம் செழிக்கும்

-------------

நமது நாட்டில் இப்பொழுது எவ்வளவோ க்க்ஷிகள் கிளம்பியிருக்கின்றன. கிளம்பியிருக்கின்றன் என்று சொல்லுவது கூடத்தவறு. வெளியிலிருந்து வந்து இறங்கிக் கொண்டிருக்கின்றன் என்று சொல்ல வேண்டும். ஜனநாயகக் கக்ஷி (Democracy), பொதுவுடமைக்கக்ஷி (Socialism), பலாத்காரப் பொதுவுடமைக்கக்ஷி (Communism), சுயமரியாதைக்க்ஷி (Self Respect), ஆசார சீர்திருத்தக்கக்ஷி (Social Reform party), முதலியன. இவைகளெல்லாம் எதற்காக? மனித ஸ்மூகத்திற்கு அநெக கஷ்டங்கள் இருக்கின்றன. அவைகளை நிவர்த்திக்க, இது தான் வழி என்று ஒவ்வொரு கூட்டத்தாரும் பிரசாரம் செய்து ஆள் சேர்த்து வருகிறார்கள். பழைய நாட்களில், மனிதன் எக்காலத்திலும், - எக்காலத்திலும் என்றால் மரித்தா பிறகும்,- சாச்வதாமாக பாவமோ கஷ்டமோ இல்லாமல் குறைவற்ற ஆனந்தமாக இருக்க, சாந்தம் நிறைந்த ஞானிகளால் வகுக்கப்பட்ட ஸமயங்கள் வழிதேடின. இக்காலத்து இப்புதுக்கக்ஷிகளோ, "செத்தபிறகு எப்படிப் போனாலென்ன! பாவமாது புண்யமாவது! இப்பொழுது செய்யும் பாவபுண்யங்கள் எப்பொழுதாவது அனுபவித்தே தீரவேண்டும், அனுபவியாமல் ஜரிக்காது என்பதெல்லாம் கட்டுக்கதை" என்று பிரசாரம் செய்துகொண்டு சாவதற்குள் உள்ள அற்பகாலத்தில் 'மனிதனுடைய ஸௌக்யத்தைத் தேடுவதே கார்யம். மனிதன் சாச்வதமாக ஸௌக்யமாய் இருப்பதைப்பற்றிப் பேசவே வேண்டாம்' என்ற கொள்கையுடனே பிரசாரம் செய்து வருகின்றன.

எக்காலத்திலும் உண்மையான சுகத்தை மனிதன் அடையவேண்டும். அதுவே உண்மையான சுகம்; மற்றவை போலி சுகம் என்பது ஒருபக்கமிருக்கட்டும். மரிக்கும் வரையில் இவ்வுலகிலேயே எல்லா மனிதர்களையும் ஒரு கஷ்டமுமின்றி நி ச்சயமாய் வாழவைக்க இந்த கக்ஷிகளில் எந்தக்கக்ஷி எவ்வளவு கரணம் போட்டாலும் முடிமா? ஒவ்வொரு கக்ஷிக்காரனும் தன் கக்ஷியின் பூர்ண நோக்கமாக சொல்லுகிறானோ, அதன் எல்லையை அடைந்து விட்டதாகவே வைத்துக்கொள்வோம். மனிதர்களுக்குள்ள கஷ்டங்களெல்லாம் அந்த நிலையில் அடியோடு மறைந்து விடுமா எ ன்று சற்று நிதானமாக ஆலோசிக்கவேண்டும். நிதானமாகவும் நிஷ்பக்ஷபாதமாகவும் ஆலோசித்துப் பார்த்தால் இப்பொழுதுயிருப்பதைவிட எவ்வளவோ புதுப்புது கக்ஷ்டங்கள் கிளம்பிவிடும். இக்கக்ஷிகளெல்லாம் மனிதருக்குச் சீமை மருந்துகள். நாட்டு மருந்தோ ஒரே மருந்து. அதுவே உண்மையில் வீர்யமான மருந்து. ஆனால் அதில் புதுப்பகட்டும் தளுக்கும் இருக்காது. அந்த மருந்தே 'குணம்'. அரசாங்கமுறை எவ்வளவோ கரணம் போட்டாலும், ஆசாரங்கள் எவ்வளவு தலைகீழானாலும் எவ்வளவு இரவல் கக்ஷிகள் கிளம்பினாலும் மானிடர்களிடையில், சாந்தமும் நற்குணமும் குறையக்குறைய மனித

வர்க்கத்துக்குக் கஷ்டம் தான் மிச்சம். அக்குணம் வளர வளர பூரவகர்மத்தின் பயனான கஷ்ட சுகங்களைத்தவிர, இந்த ஜன்மத்தில் மனிதன் புதிதாகக் கிளறிக்கொள்ளும் கஷ்டங்கள் எவ்வளவு குறையலாமோ அவ்வளவு குறையும். குணம் எப்படி ஏற்படும்? குணமுள்ளவர்களை எப்பொழுதும் மனதில் நினைக்கும் ஸந்தர்ப்பம் ஏற்பட்டால் இம்மனமும் தன்மயமாக மாறும். ஒரு வித்வான், கம்பனுடைய கவிகளையே படித்துவந்தால், கம்பனைப் போல் எழுத ஆரம்பிக்கிறான். நற்கீரரைப் படித்து வந்தால் அவரைப்போல எழுதுகிறான். உத்தமகுணமுள்ளவர்களை, மனிதவர்க்கத்தோரெல்லாம் அதிகமாய் மனதால் நாடும்படிச் செய்வதே தர்மபிரசாரம். அதைச் செய்யும் அரசாங்கத்திற்குப் போலீஸ் செலவும் மிலிடரி (Military) செலவும் குறையும். வியாதிச் (வைத்திய இலாக்கா) செலவும், வம்புச் செலவும் (நீதி இலாக்கா) குறையும். அவ்வித நற்குணக் குன்றுகள் நம் நாட்டில் குறைவில்லை. மனிதவர்க்கத்தின் கஷ்டவியாதிக்காக, ஸந்தேகமான சீமை மருந்துக்குப் போகவேண்டிய பஞ்சம் நமக்கில்லை. ஒவ்வொரு உத்தம குணத்திலும் பெருவிளக்காயிருக்கும் பெரியோர்களை மனதில் நிலை நிறுத்துவோம். அவர்களுடைய வழியைக் கடைபிடிப்போம்.

(1) ஒவ்வொருவனும் தன் குடும்பத்தைப் போஷிப்பதைத் தவிற வேறு ஒரு மனிதனுக்கு உணவிட்ட பின்னரே தான் உண்பது எண்ணும் விரதமே அதிதிபூஜை என்றும் விருந்தோம்பல் என்றும் சாஸ்திரத்தில் கூறப்படுவது. இதைப் பிரசாரம் செய்து எல்லோரும் கடைப்பிடித்து விட்டால் உணவுரேஷன், பஞ்சம் முதலிய சிக்கல்கள் அநேகமாய் தீர்ந்துவிடும். இத்துடன் ஏகாதசி உபவாசம் அல்லது கிருத்திகை உபவாசம் முதலிய தெய்வீக விரதங்கள் கைவிடப்படாமல் நமது கலாசாரப்படி அனுஷ்டிக்கப்பட்டு வந்தால் பற்றாக்குறையால் ஏற்படும் பது நிர்ப்பந்த உபவாசங்களுக்கு இடமிராது.

(2) ஒவ்வொரு மனிதனும் நாள்தோரும் தன் கையால் ஒரு பிடிப் புல் ஏதாவதொரு பசுவின் வாயில் கொடுத்தே தீருவது என்ற விரதம் சாஸ்திரங்களில் ...கோக்ராஸம் எனப்படுவது. இம்முறை அனுக்ஷ்டானத்துக்குக் கொண்டுவரப்பட்டு விட்டால் அநேகமாய் பசு வர்க்கத்தின் பிரச்னை தீர்ந்துவிடும்.

(3) ஒவ்வொருவனும் தன் குலத்தொழில் சம்பந்தப்பட்ட வித்தையை (கல்வியை) முதலில் கற்ற பிறகே வேறு வேலைகளிலோ காரியங்களிலோ பிரவர்த்திக்க வேண்டும் என்பது சாஸ்திரவிதி. இம் முறையை ஜனங்களும் அரசாங்கமும் சேர்ந்து அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்துவிட்டால், உலகத்தில் கங்காணிகளோ, பிச்சைக்காரர்களோ, கூலிகளோ மலியாமலிருக்கும். தன் குலத்தொழிலே தனக்கேற்றதென்ற தெய்வீக எண்ணத்தினால் இதரத் தொழிகளில் போட்டி போடுவது, கட்சி கட்டுவது முதலிய தொந்தரவுகளும் குறையும்.

(4) ஜீவனத்தையே வேதியர்கள் பெரியதகக் கருதாமல், தங்கள் மக்களை முதலில் வேதசாஸ்திர பயிற்சியே செய்வித்து, பின்னால் முடிந்த வரையில் இதர கலைகளில் பயிலவைக்கவேண்டுமென்பது சாஸ்திரவிதி. அவ்விதம் கற்ற கலைகளையும் தன் ஜீவனத்திற்கான தொழிலாக மாற்றிக் கொள்ளாமல், அவ்வக்கலைகளுக்கு ஞானதானம் செய்வித்து, அவர்கள் பக்தியாய்க் கொடுக்கும் குருதக்ஷிணையைக் கொண்டு கஷ்டஜீவனமோ

சுக ஜீவனமோ நேர்ந்த ஜீவனத்தை ஸந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு வாழும் எண்ணத்தைப் பிரசாரம் செய்ய வேண்டும். இதுவேயாம் மூத்தோர் வகுத்த வழி.

இதுவே அநேக சிக்கல்களுக்கு மஹரிக்ஷிகள் கைக்கொண்ட மருந்து.

வேத தர்மசாஸ்திர சபையோர்